செ.வெ.எண். 37 நாள்: 13.09.2017

## திருநெல்வேலி மாவட்டம், புரட்டாசி சனிக்கிழமைகளில் நவதிருக்கோவில்களுக்கு செல்லும் பக்தர்களுக்கு வசதியாக சிறப்பு சேவை பேருந்துகள் இயக்கம்

நவதிருப்பதி திருக்கோவில்களை பக்தர்கள் வசதியாக வழிபடும் நோக்கத்தில், வருகின்ற புரட்டாசி சனிக்கிழமை தினங்களான 23.09.2017, 30.09.2017, 07.10.2017 மற்றும் 14.10.2017 ஆகிய நாட்களில், சிறப்புச் சேவை பேருந்துகள் இயக்க தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) வ.து., திருநெல்வேலி மண்டலம், தகுந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இந்த சிறப்புச் சேவை பேருந்துகள் திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திலிருந்து, மேற்சொன்ன நாட்களில் காலை 7.00 மணிக்கு புறப்பட்டு நவதிருப்பதி ஸ்தலங்களான

| | |
|---|---|
| 1) | திருவைகுண்டம் |
| 2) | நத்தம் |
| 3) | திருப்புளியங்குடி |
| 4) & 5) | இரட்டைத்திருப்பதி |
| 6) | பெருங்குளம் |
| 7) | தென்திருப்பேரை (டச்சிங் வனதிருப்பதி) |
| 8) | திருக்கோளுர் மற்றும் |
| 9) | ஆழ்வார் திருநகரி |

வழியாக இயக்கப்பட்டு இரவில் திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் வந்து சேரும்.

இதற்கான பேருந்து கட்டணம் நபர் ஒன்றுக்கு **ரூ.325/-** மட்டும் ஆகும். இதற்கென முன்பதிவு செய்யவிரும்புவோர், திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்தில் காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை கட்டணத் தொகையினை முழுமையாகச் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மேற்சொன்ன 4 புரட்டாசி சனிக்கிழமைகளிலும் கீழ்கண்ட வழித்தடங்களிலும் தேவைக்கேற்ப சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருநெல்வேலி சந்திப்பு | - | திருவேங்கடநாதபுரம் |
| 2) | திருநெல்வேலி சந்திப்பு | - | கருங்குளம் |
| 3) | திருநெல்வேலி சந்திப்பு | - | எட்டெழுத்து பெருமாள் கோவில் |
| 4) | திருநெல்வேலி | - | நம்பிகோவில் (வழி) நாங்குனேரி, ஏர்வாடி & திருக்குறுங்குடி |
| 5) | திருக்குறுங்குடி | - | நம்பிகோவில் |
| 6) | வள்ளியூர் | - | களக்காடு (வழி) திருக்குறுங்குடி |
| 7) | அம்பாசமுத்திரம் | - | அத்தாளநல்லூர் |
| 8) | வீரவநல்லூர் | - | அத்தாளநல்லூர் |
| 9) | திருச்செந்தூர் / குரும்பூர் | - | வன திருப்பதி |

எனவே, பக்தர்களும் பொதுமக்களும் இந்த அரிய வாய்ப்புக்களை பயன்படுத்தி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது

B.S.G.குமார்,
பொது மேலாளர்

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி